திமுக தலைமை குதிரை பேரத்தில் ஈடுபடுகிறது



கோவை, நவ. 18: தவெக ஆட்சியைக் கவிழ்க்க திமுக தலைமை குதிரை பேரத்தில் ஈடுபடுகிறது என்று மதிமுக முதன்மைச் செயலாளரும், மக்களவை உறுப்பினருமான துரை வைகோ கூறினார்.

இது தொடர்பாக கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை அவர் கூறியதாவது: காவிரி நதி நீர் விவகாரத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு தெளிவாக உள்ளது. 177 டிஎம்சி நீர் தமிழகத்துக்கு வர வேண்டியது. இதைப் பாதிக்கும் வகையில் எந்த வேலையையும் செய்யக் கூடாது என்று அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கர்நாடக முதல்வர் உச்சநீதிமன்றத் தீர்ப்பை திரித்துப் பேசி, பொய்யான தகவலைப் பரப்பி வருகிறார். தமிழக அரசு இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. இரு மாநிலங்களுக்கு இடையிலான பிரச்னைக்கு மத்திய அரசு தீர்வு வழங்க வேண்டும். சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக மறைமுகக் கூட்டணி வைக்க முயன்றது. தவெக ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிப்பதுடன், குதிரை பேரத்திலும் திமுக தலைமை ஈடுபடுகிறது. கள்ளக்குறிச்சி ஆட்சியர் விவகாரத்தில் தமிழக அரசு விசாரணை நடத்தி வருகிறது. தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு சார்பில் கூறப்பட்டுள்ளது.

திமுக, அதிமுக ஆட்சி காலத்தில் வாச்சாத்தி விவகாரம், பொள்ளாச்சி வழக்கு, ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு என பல விஷயங்கள் நடந்துள்ளன. புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜெம் வீரமணி விவகாரத்தில் திமுக , அதிமுக ஆட்சியில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தவெக ஆட்சியில் நேர்மையான முறையில் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

சிஎஸ்ஐ ஆல் சோல்ஸ் திருச்சபை புதிய போதகக் குழு உறுப்பினர்கள் தேர்வு



கோவை சிஎஸ்ஐ ஆல் சோல்ஸ் ஆலய திருச்சபைக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதகக் குழு உறுப்பினர்கள்.

கோவை, நவ. 18: கோவை சிஎஸ்ஐ ஆல் சோல்ஸ் ஆலய திருச்சபைக்கு புதிய போதகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கோவை சிஎஸ்ஐ ஆல் சோல்ஸ் ஆலய திருச்சபைக்கு 2025-2028-ஆம் ஆண்டுக்கான புதிய போதகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதன்படி, ஜே.வினோத் நற்குணம் (கௌரவச் செயலாளர்), ஜெஃபர்சன் தர்மராஜ் (கௌரவப் பொருளாளர்), ஹெச்.எம்.செட்ரிக், சிந்தியா ஃபிராங்க், ஜே.கிங்ஸ்லி, மனோஜ் ஆபிரகாம், மிஷ்மலா சுஷித், பிருத்வி ஜோனதன் தாமஸ், ராபின்சன் சாலமன், ஷர்மிளா பிரின்ஸ், ஷெர்லி ஷீபா ஆலிவர் ஆகியோர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

புதிய குழுவினருக்கு சிஎஸ்ஐ ஆல் சோல்ஸ் ஆலய பிரஸ்பைட்டர் - தலைவர் பாதிரி ஆர்.அருண் திலகம் வாழ்த்து தெரிவித்தார்.

என்டிசி ஆலைகளை இயக்க நடவடிக்கை: டிசம்பர் 23-இல் தொமுச போராட்டம்

கோவை, நவ. 18: என்டிசி ஆலைகளை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் டிசம்பர் 23-ஆம் தேதி 'வீடு திரும்பா போராட்டம்' நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, கோவை ராமநாதபுரத்தில் உள்ள அலுவலகத்தில் தொமுச மாநிலப் பொதுச் செயலாளர் பார்த்தசாரதி செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது: முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் கடந்த 1974-ஆம் ஆண்டு நாடு முழுவதும் மூடப்பட்ட 128 தனியார் பஞ்சாலைகளை மத்திய அரசு கையகப்படுத்தி, தேசிய பஞ்சாலைக் கழகத்தின் (என்டிசி) கீழ் கொண்டு வந்தது. இதன் மூலம் சுமார் 3 லட்சம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பெற்றனர்.

கடந்த 2020-ஆம் ஆண்டு கரோனா பொது முடக்கத்தின்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்ட என்டிசி ஆலைகள் தற்போது வரை இயக்கப்படவில்லை. கடந்த 8 ஆண்டுகளாகத் தொழிலாளர்களுக்கு போனஸ், ஆண்டு ஊதிய உயர்வு, ஓய்வுபெற்றவர்களுக்கான பணிக் கொடை உள்ளிட்ட சட்டப்பூர்வ பணப் பலன்கள் எதுவும் வழங்கப்படவில்லை. மேலும், ஆலையில் பணியாற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் ஓராண்டாக ஊதியம் வழங்கப்படவில்லை. மத்திய அரசு ஆலைகளை இயக்காததுடன், விருப்ப ஓய்வும் வழங்க மறுக்கிறது.

நாடு முழுவதும் 12 ஆயிரமாக இருந்த என்டிசி தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது 7 ஆயிரமாகக் குறைந்துள்ளது. இவர்களுக்கு மாதம் சுமார் ரூ.40 கோடி ஊதியமாக வழங்க வேண்டிய நிலையில், கோவையில் உள்ள ஆலைகளுக்கு மட்டும் மாதம் ரூ.5 கோடி தேவைப்படுகிறது. ஆலைகள் இயங்காததால் இயந்திரங்கள் துருப்பிடித்து பயனற்றதாகி வருகின்றன.

மத்திய அரசால் இந்த ஆலைகளை நடத்த முடியவில்லை என்றால், பழைய உரிமையாளர்களிடமே ஒப்படைக்க வேண்டும் அல்லது தொழிற்சங்க நிர்வாகிகளிடம் ஒப்படைத்தால் நாங்களே ஏற்று நடத்த தயாராக உள்ளோம்.

எனவே, இந்தப் பிரச்னையில் பிரதமர் மோடி தலையிட்டு தீர்வு காண வேண்டும். இல்லையெனில், திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து டிசம்பர் 23-ஆம் தேதி 'வீடு திரும்பா போராட்டம்' மற்றும் ஆலைகளை நாங்களே ஏற்று நடத்தும் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றார்.

ஆர்ப்பாட்டம்...



காலியாக உள்ள அஞ்சல் பணியிடங்களை நிரப்ப வேண்டும், கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை, குட்ஷெட் சாலையில் உள்ள தலைமை அஞ்சல் நிலையத்தில் கருப்புப் பட்டை அணிந்து புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கத்தினர்.

தொழிலாளியைத் தாக்கிய 2 இளைஞர்கள் கைது

வடவள்ளி, நவ.18: கூலித் தொழிலாளியைத் தாக்கிய 2 இளைஞர்களை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பூர் குமரன் வீதியைச் சேர்ந்தவர் அருண்குமார் (30). இவர் கோவை, தீத்திபாளையம் பகுதியில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார். இந்நிலையில், மாதம்பட்டிக்கு உணவு வாங்க திங்கள்கிழமை சென்று விட்டு, வரும் வழியில் வெற்றிலையைப்போட்டு சாலையோரம் எச்சில் துப்பியுள்ளார். அப்போது, அந்த வழியாக வந்த பிரதாப் அவரது நண்பர் சத்தியானந்தம் ஆகியோர் மீது எச்சில் பட்டதாம். இதையடுத்து, மன்னிப்பு கேட்ட நிலையிலும், அவர்கள் அருண்குமாரை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இது குறித்து அருண்குமார் அளித்த புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்த பேரூர் போலீஸார், தாக்குதலில் ஈடுபட்ட ஆலாந்துறையைச் சேர்ந்த பிரதாப் (27), செல்லப்பகவுண்டன் புதூரைச் சேர்ந்த சத்தியானந்தம் (20) ஆகியோரைக் கைது செய்தனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள்

கனிமொழி சந்தோஷ் எம்எல்ஏ வழங்கினார்



மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளை வழங்கிய கனிமொழி சந்தோஷ் எம்எல்ஏ.

பெ.நா.பாளையம், நவ.18: மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள், பொதுமக்களுக்கு அத்தியாவசிய மளிகைப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி கவுண்டம்பாளையம் சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

துபை டிவிகே இவண்ட் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சிக்கு வடக்கு ஒன்றியச் செயலாளர் சுரேஷ், 35-ஆவது வார்டு பகுதி செயலாளர் முத்துவேல் ராஜா, துடியலூர் 1, 2, 14-ஆவது வார்டு பகுதி செயலாளர் சபரி மனோ, எஸ்.எஸ்.குளம் ஒன்றியச் செயலாளர் கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கனிமொழி சந்தோஷ் எம்எல்ஏ சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளையும், நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அத்தியாவசிய மளிகைப் பொருள்களையும் வழங்கினார்.

முன்னதாக, துபை டிவிகே இவண்ட் பிரதிநிதி அனிருத் தலைமை வகித்துப் பேசுகையில், சட்டப் பேரவை உறுப்பினர் கனிமொழி சந்தோஷின் மக்கள் நலச் செயல்பாடுகள் மற்றும் தொகுதி மக்களுக்காக அவர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் பணிகளால் நாங்கள் மிகவும் ஈர்க்கப்பட்டோம். அதன் காரணமாகவே கவுண்டம்பாளையம் தொகுதிக்கு நேரடியாக வந்து நலத் திட்ட உதவிகளை வழங்கியுள்ளோம் என்றார்.

பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda

பிராந்திய சொத்து மீட்புக் கிளை (ROSARB)

2வது தளம், பிராந்திய அலுவலக வளாகம், 82, வங்கி சாலை, கோயம்புத்தூர் – 641 018

போன் : 9538993885; Email: SARCOI@bankofbaroda.bank.in

மின்னணு ஏல அறிவிப்பு

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 6(2) & 8(6)கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, சட்டபெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் சட்டபெற்றுக் கடனளித்த பேரில் ஆக்ப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

வ. எண்	கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி:	அசையாச் சொத்தின் கருக்கமான விவரம் மற்றும் அதன் மீது ஏதேனும் மில்லங்கங்கள் இருப்பின் அது குறித்த தகவல்	மொத்த நிலுவைத் தொகை	மின்ஏலத் தேதி மற்றும் நேரம்	குறைந்தபட்ச விலை, முன்வைப்புத் தொகை, ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கப்பூர்வ / அடையாளப்பூர்வ / நேரடி)	ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம்
1	**1. திரு. அருள்நாதன் I (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. இன்னாசிமுத்து, கதவு எண்: 26A, மனை எண்: 25, தெற்குப் பகுதி, சென்னியாண்டவர் நகர், KPR மில்ஸ் சாலை, நியூ பஸ் கிரிட், கருமத்தம்பட்டி, சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் - 641659	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் சார்-பதிவு மாவட்டம், சூலூர் தாலுகா, கருமத்தம்பட்டி கிராமம், பட்டா எண் 234-ன் சர்வே எண் 749ன் அளவு 1.96.5 புஞ்சை ஹெக்டேர் அதன் தரம் ரூ. 5.44, இதில் துணைப்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் 749/1A1A-ன் 2.37 ஏக்கர் புஞ்சை நிலத்தில் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு கருமத்தம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தால் வழங்கப்பட்ட 24.08.2022 தேதியிட்ட ந.க. எண் 582/2022/E-இன் படி ஒப்புதல் பெற்ற மனைப் பிரிவான சென்னியாண்டவர் நகர் எனப் பெயர் கொண்ட மனைப் பிரிவின் மனை எண் 25-இன் தெற்குப் பகுதியின் **எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு:** கிழக்கு-மேற்கு சாலையின் **வடக்கே,** 23 அடி அகல வடக்கு-தெற்கு மனைப்பிரிவு சாலையின் **கிழக்கே,** மனை எண் 25-இன் மீதமுள்ள பகுதியின் **தெற்கே,** மனை எண் 24ன் **மேற்கே.** இந்த எல்லைகளுக்குள்: கிழக்கு மேற்காக வடக்குப் பகுதியில் 41.375 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பகுதியில் 41 ¼ அடி; வடக்கு தெற்காக இரு பக்கங்களிலும் 26 ½ அடி. மொத்தம் 1064 சதுர அடி அல்லது 100.707 சதுர மீட்டர் நிலம்.	**04.10.2026** தேதிப்படி **ரூ. 33,74,700.00/-** (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூறு மட்டும்) மற்றும் இதர செலவுகள், கட்டணங்கள்.	**09.12.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**	**ரூ. 36,00,000/- ரூ. 3,60,000/- ரூ. 50,000/-**	**நேரடி கவாதீனம்**	**08.12.2026 – காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை**
2	**M/s. Avathaar Industries** (கடன்தாரர்) KK ஆச்சாரிஸ், VK பாளையம், கரடிவாவி வழி, புளியம்பட்டி கிராமம், பல்லடம் தாலுகா, திருப்பூர்- 641658 **அதன் பிரதிநிதியாக பங்குதாரர்கள் திருமதி. P.காயத்திரி.** க/பெ. திரு. இளங்கோவன், (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), கதவு எண். 5/129, கணேஷ் கார்டன், காடம்பட்டி, சூலூர், கோயம்புத்தூர்- 641401, **திரு. M. ஸைத்சன்.** க/பெ. N.மருதாச்சலமூர்த்தி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), எண். 7/42-30, குமரன் நகர், கட்டம்-2, கீரந்தம், சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்- 641035, **திருமதி. K.பத்மாவதி.** க/பெ. K. கந்தசாமி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர், ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்), கதவு எண் 82-4/1B, சமப்பா லேஅவுட், கெண்டையூர் கிராமம், மேட்டுப்பாளையம், மகாதேவபுரம், கோயம்புத்தூர் - 641305	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கடசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் நகரம் கெண்டயூர் S.F. எண் 272/1 பட்டா எண் 531-ன் 2.82 ஏக்கர் நிலத்தில் வடக்குபுறத்தில் 1.79 ஏக்கர் நிலத்தில்,அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் சி.எண் 2516/81 CNR SL P/R (CN) 137/81ன் வீட்டு மனைகளாக உருவாக்கப்பட்டதில் தெற்குப்புறத்தில் மனை எண் 11-ன் அரை பங்கு நிலத்தின் அளவு 1237½ சதுர அடி அதன் **எல்லைகள்: வடக்கு:** A. பெலோமினாவுக்குச் சொந்தமான மனை எண் 11-ன் வடபுறத்தில் அரைபங்கு, **தெற்கு :** மனை எண் 12, **கிழக்கு:** மக்களிடப்பணுக்குச் சொந்தமான மனை எண் 10-இல் உள்ள வீடு, **மேற்கு :** மனைப்பிரிவின் வரைபடத்தில் உள்ளபடியே 30 அடி அகல தெற்கு சாலை. **அளவுகளில்:** கிழக்கு-மேற்காக-வடக்கில் 41½ அடி, கிழக்கு-மேற்காக தெற்கில்- 41 அடி. வடக்கு- தெற்காக மேற்கில்- 30 அடி. வடக்கு- தெற்காக கிழக்கில்- 30 அடி. இதில் நிலத்தின் அளவு 1237 ½ சதுர அடி காலி நிலம் மற்றும் சொத்தின் வழிப்பாதைகள் மனைப்பிரிவின் சாலைகள் பயன்படுத்துவதற்கு, உரிமைகள் உள்ள அனைத்து இதர வசதிகளையும் கொண்டவை. மேலே கூறப்பட்ட கட்டுமான வீட்டின் கதவு எண். 82/4 (1B) அதன் கதவுகள், ஜன்னல்கள், மற்றும் மின்இணைப்பு, குழநீர் இணைப்பு இதரவை. கதவு எண் 82/4 (1B), சொத்து வரி மதிப்பீட்டு எண் 14615, குழநீர் வரி மதிப்பீட்டு எண் 6799, மின் இணைப்பு எண் 153-008-445. இச் சொத்து, மேட்டுப்பாளையம் நகரப் பஞ்சாயத்து மேட்டுப்பாளையம் நகர பழைய வட்ட எண் 13, புதிய வட்ட எண் 24, T.S.எண் 26, பிளாக் எண் 46-ன் எல்லையில் உள்ள இச்சொத்து **திருமதி K.பத்மாவதி.** க/பெ. கந்தசாமி பெயரில் உள்ளது.	**04.10.2026** தேதிப்படி **ரூ. 1,03,23,114/-** (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து நூற்று பதினான்கு மட்டும்) மற்றும் இதர செலவுகள், கட்டணங்கள்.	**09.12.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**	**ரூ. 27,00,000/- ரூ. 2,70,000/- ரூ. 50,000/-**	**நேரடி கவாதீனம்**	**08.12.2026 – காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை**
3	**M/s RR Agencies (கடன்தாரர்) பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. S. ரகுராமன்,** கதவு எண் 401, Brizo அப்பார்ட்மெண்ட்ஸ், முருகன் நகர், விலாங்குறிச்சி, கோயம்புத்தூர் - 641033. **திரு. S. ரகுராமன் (உரிமையாளர் மற்றும் அடமானதாரர்),** த/பெ. திரு. ஸ்டாலின் T.M., X4, IUDP காலனி, செல்வபுரம், கோயம்புத்தூர் - 641026.	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிறுமுகை கிராமம், S.F எண் 51-ன் தீவா நகரில் உள்ள நிலத்தின் அளவு 3.20 ஏக்கர், அதில்வீட்டுச் சொத்தின் **எல்லைகள்** மற்றும் அளவுகள் பின்வருமாறு: கப்பம்மாளுக்குச் சொந்தமான மீதமுள்ள சொத்தின் **வடக்காக,** கிழக்கு-மேற்கு 8 அடி அகலபொதுச் சாலைக்கு **தெற்காக,** கோவிந்தராஜுக்குச் சொந்தமான சொத்தின் **கிழக்காக,** தங்கமுத்துப்பிரமணியத்திற்குச் சொந்தமான சொத்தின் **மேற்காக.** இதன் அளவுகள் பின்வருமாறு: கிழக்கு-மேற்காக வடக்குப் பகுதியில் 33 அடி, கிழக்கு-மேற்காக தெற்குப் பகுதியில் 36 அடி, மற்றும் வடக்கு-தெற்காக இரு பக்கங்களிலும் 70 அடி. மொத்தம் 2415 சதுர அடி அல்லது 5 சென்ட் மற்றும் 235 சதுர அடி அல்லது 224.36 சதுர மீட்டர் மனை அதனுடன் கட்டிடம் உள்ள அதனுடன் இதர வசதிகள் அதனுடன் சொத்து வரி மதிப்பீடு, மின் இணைப்பு மற்றும் அதற்கான வைப்புத்தொகைகள், மற்றும் பொது அணுகல் உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் இதில் அடங்கும். இக்கட்டிடம் கதவு எண் 23D மற்றும் சொத்து வரி மதிப்பீட்டு எண் 2813 ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்தச் சொத்து, சிறுமுகை பேரூராட்சி எல்லைக்குள், உட்பிரிவு SF No. 51/2-இல் உள்ளது. இச் சொத்து திரு. ஸ்டாலின் என்பவரின் மகனான திரு. S. ரகுராமன் என்பவருக்குச் சொந்தமானது.	**04.10.2026** தேதிப்படி **ரூ. 75,15,850.26** (ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பது மற்றும் இருபத்தாறு பைசா மட்டும்) மற்றும் இதர செலவுகள், கட்டணங்கள்.	**09.12.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**	**ரூ. 42,50,000/- ரூ. 4,25,000/- ரூ. 50,000/-**	**நேரடி கவாதீனம்**	**08.12.2026 – காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை**

அசையாச் சொத்து குறித்த விரிவான விவரம் மற்றும் அதன் மீது ஏதேனும் மில்லங்கங்கள் இருப்பின் அவை குறித்த விவரம்: ஏதுமில்லை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை **https://www.bankofbaroda.bank.in/e-auction.htm** மற்றும் **https://baanknet.com** பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பிட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். **9538993885** மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 17.11.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

பாங்க் ஆஃ இந்தியா / Bank of India BOI

பொள்ளாச்சி கிளை : எண்.123, LBS இல்லம், பரமதி கேன் ஏஜென்சீஸ் எதிரில், பல்லடம் ரோடு, பொள்ளாச்சி, போன் : 04259 - 226462, 226463

மின்னஞ்சல் : Pollachi.Coimbatore@bankofindia.bank.in

பாதுகாப்பு பெட்டகம் உடைத்துத் திறப்பது குறித்த பொது அறிவிப்பு

நாங்கள் தொலைபேசி அழைப்புகள் மற்றும் நினைவூட்டுக் கடிதங்கள் மூலம் பல்வேறு வகையிலும் பெட்டக வாடகைதாரரைத் தொடர்பு கொள்ள முயற்சி மேற்கொண்டும், அவரிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கப் பெறவில்லை. பெட்டக வாடகைதாரர்/சட்டபூர்வ வாரிசு(கள்) யாரேனுமிருப்பின் அவர்கள் இந்த அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் வங்கியைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் வங்கி, பொருந்தும் படியான இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வங்கியின் விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப பெட்டகத்தினை உடைத்துத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

லாக்கர் எண்	வாடகைதாரர் பெயர் மற்றும் முகவரி	நிலுவைத் தொகை	நிலுவை தேதி முதல்
A55	திரு.ராஜாராம். A.R.V, த/பெ வெங்கடசாமி, A.R. 10/1, பாரி வள்ளல் வீதி, சுளிஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி – 642 006.	ரூ.5,600/- + GST	18.04.2022

தேதி : 19.11.2026/ இடம் : பொள்ளாச்சி முதுநிலை மேலாளர், பேங்க் ஆப் இந்தியா

DBS வங்கி இந்தியா லிமிடெட்,
CBG வங்கி மற்றும் மீட் :
பிளாட்டினம் ஜூபிலி பில்டிங், எண்.68,
ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர் – 641 001,
போன் : 97905 11385

DBS

சுவாதீன அறிவிப்பு

விதி 8(1) ன் கீழ் (அசையா சொத்திற்காக)

DBS வங்கி இந்தியா லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம் அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மூலமாக செக்ஷன் 13(12), SARFAESI சட்டம் 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகளின், விதி 3-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி கடன் பெற்றுள்ள **கடன்தாரர் : 1. திரு.P. ரவிக்குமார் பழனிசாமி,** த/பெ. பழனிசாமி, எண்.141, அத்திப்பாளையம் ரோடு, சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர் – 641 049. **2. திருமதி. மஞ்சுளா,** க/பெ.P. ரவிக்குமார், எண்.141, அத்திப்பாளையம் ரோடு, சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர் – 641 049 ஆகியோர்களை, கடன் நிலுவைத் தொகையான **ரூ.38,07,893.03 (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா மூன்று மட்டும்) 31.08.2026 தேதி வரை** மற்றும் பின்வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் ஏதேனுமிருப்பின் சேர்த்து, கேட்பு ஓலை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு **11.09.2026** தேதியிட்ட கேட்பு ஓலை மூலம் பணித்தது.

ஆனால் மேற்படி கடன்தாரர் இந்த கடன்தொகையைக் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் செலுத்தத் தவறிவிட்டபடியால், வங்கி தன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மூலமாக மேற்குறிப்பிட்ட பிரிவு 13(4) மற்றும் விதி எண்.8ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் மூலமாக, கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **17.11.2026** அன்று கையகப்படுத்திக் கொண்டுள்ளது என்று கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் மீது எந்தவித வரவு செலவும் மேற்கொள்ளக் கூடாது என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் **DBS வங்கி இந்தியா லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்** செலுத்த வேண்டிய தொகை **ரூ.38,84,083.38 (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து எண்பத்து மூன்று மற்றும் பைசா முப்பத்து எட்டு மட்டும்) 15.11.2026 தேதி வரை** மற்றும் பின்வட்டி, செலவுகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அட்டவணை – I (அசையா சொத்தின் விபரம்) :

அடமானத்துக்குள்ளாகும் பிணையச் சொத்தின் விவரம் : திரு.P. ரவிக்குமார் பழனிசாமிக்குச் சொந்தமான சொத்து : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு மாவட்டம், அன்னூர் தாலுகா, வெள்ளமடை கிராமம், சர்வே என்.473/5 ல் உள்ள நிலம் ஏக்கர் 3.80 சென்ட், இதில் விற்பனை செய்யப்பட்ட நிலங்கள் போக மீதமுள்ள நிலங்கள் சர்வே என்.473/5 ல் உள்ள ஏக்கர் 1.88 சென்ட் நிலம், இதில் லே அவுட்டில் அமைந்துள்ள மனை என்.2 அமைந்த **எல்லைகள் விபரம் :** கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, கருப்பசாமிக்குச் சொந்தமான சொத்துக்குத் தெற்கு, மனை என்.1 க்குக் கிழக்கு, கதவு என்.5/277 வீட்டுக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், சொத்தின் **அளவுகளாக,** கிழமேல் வடபுறம் – 95 அடி, கிழமேல் தென்புறம் – 95 அடி, தென்வடல் கிழபுறம் – 69 அடி, தென்வடல் மேற்புறம் – 69 அடி. ஆக 6555 சதுரடி (608.974 சதுர மீட்டர்) அல்லது 15 சென்ட் 21 சதுரடி காலி நிலம், 2500 சதுரடியிலான ஆர்சிசி கட்டிடத்துடன், அனைத்து பொருத்தியவைகள் மற்றும் பிட்டிங்குகளுடன், சன்னல்கள், முன், பின் கதவு நிலவுகள், வீட்டு முன்வெளி, குளியலறை மற்றும் அதன் கதவுகள், சன்னல்கள், நிலவுகள், மின்சார சர்வீஸ் இணைப்பு, அதன் பொருத்தியலைகளுடன், காப்புத் தொகை, வழக்கமான வழித்தடம் மற்றும் தரைக